முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1570

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**16.01.2024,** செவ்வாய்கிழமை

1. ஞான வேலிகொண்ட அரங்கனே
ஞானிகள் துணைகொண்ட தேசிகனே
வானவர்கள் போற்றுகின்ற வள்ளலே
வையகத்தைக் காக்க வந்த அண்ணலே
2. அண்ணலே ஆறுமுக அரங்கனே
அகிலமதில் உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
வரமென ஞான அறிவுரை ஆசி
வழங்குவேன் சோபகிருது கலை திங்கள் தன்னில்
(சோபகிருது வருடம் தை மாதம் 02 ம் நாள், 16.01.2024, செவ்வாய்கிழமை)
3. தன்னிலே அரங்கன் சக்தி பலம்
தரணி எங்கும் தர்மபலமாக மாறி
மாறியே உலகோர் பசிபிணி விரட்டி
மண்ணுலகில் அற்புதத்தை நடத்தி வர
4. அரங்கன் வழி தர்மத்தை ஆதரித்து
அகிலத்தில் பொன்பொருள் உதவி செய்து
வகைபட தர்மம் காக்கும் அனைவருமே
வையகத்தில் அரங்கன் ஆசிக்குள்ளவர்களாகி
5. ஆகியே அவர்களும் அரங்கன் தேடல்வழி
ஆற்றல்பட ஞானிகளாக மாற்றம் பெறக்கூடும்
கூடவே இந்த வித மகத்துவத்தை
குறைவின்றி ஆறுமுகன் யான்
ஈடேற்றம் நித்தம் நித்தம் அரங்கனுக்கு வரமாக
இனிதே வழங்கி காத்துவர
வருகவே அரங்கனை அனுகி
வையகத்தில் தீட்சை பெற்ற மக்களுக்கு

சித்திகளும் உறுதி உறுதி
சிறப்பறிவு கூடி இனிதே
இனி பிறவா பெரும்பேறும் உறுதிஉறுதி
உறுதி தந்தேன் அரங்கனால் உலகமாற்றம்
உயர்வாக நடந்தேறி இந்த கலியுகத்தில்
குறைவில்லா ஞான ஆட்சி
கூறிடுவேன் ஞானிகள் ஆட்சி உதயமாகும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—